12 பிப்ரவரி 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 6 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்: குடும்பமும் ற்று மயும்

# உலக அமைதி மற்றும் ஒருங்கிணைந்த வாழ்வு வாழ அழைப்பு விடுக்கும் ஓர் ஆவணம்.

அபுதாபி, 4 பிப்ரவரி 2019 - திருத்தந்தை பிரான்சிஸ்,
அல்-அசார் தலைமை இமாம், அஹ்மாட் அல் தாயேப்.

## பகுதி- 2

உலக அமைதிக்கு சமயங்கள் ஆற்றவேண்டிய பங்கின் முக்கியத்துவத்தை பின்வரும் கருத்துகள் வலியுறுத்துகின்றன.

- சமயங்களின் உண்மையான போதனைகளான, அமைதி, புரிந்துணர்வு, சகோதரத்துவம் மற்றும் சகவாழ்வில் இணக்கம் ஆகிய மதிப்பீடுகளில் உறுதியான நம்பிக்கைக் கொண்டு வேரூன்றி இருக்க நம்மை அழைக்கின்றது



- நம்பிக்கை, சிந்தனை, கருத்துகளை வெளிப்படுத்துதல் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றை வெளிப்படுத்தக்கூடிய சுதந்திரம் ஒவ்வொரு தனிமனிதரின் உரிமை.
- இரக்கத்தின் அடிப்படையில் அமைந்த நீதியே நாம் பின்பற்ற வேண்டிய பாதை
- உரையாடல் மற்றும் கலாச்சார சகிப்புத்தன்மையை பரவலாக ஊக்குவித்தல்
- நம்பிக்கையாளர்களிடையே உரையாடல் - ஆன்மீகம், மனிதம் மற்றும் சமூக மதிப்பீடுகளைப் பகிர்ந்து பரந்த மனப்பான்மையில் நம்பிக்கையாளர்கள் ஒன்றுகூடுதல்
- வழிபாட்டுத் தலங்களின் பாதுகாப்பு
- தீவிரவாதம் வருத்தத்திற்குரியது; கிழக்கு, மேற்கு, வடக்கு தெற்கு என உலகில் எந்தத் திசையில் வாழும் மக்களாக இருந்தாலும் அவர்களின் பாதுகாப்புக்கு தீவிரவாதம் அச்சுறுத்தலாக உள்ளது.
- குடியுரிமையின் உண்மையான கருத்து - உரிமைகள் மற்றும் கடமைகளின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அனைவரும் அனுபவிப்பது
- சந்தேகத்திற்கு இடமின்றி கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையிலான நல்லுறவு மறுக்கமுடியாத அவசியம்.
- பெண்களின் கல்வி உரிமை மற்றும் வேலைவாய்ப்பு மிகவும் இன்றியமையாத தேவையாகும்
- குழந்தைகள் குடும்ப சூழலில் வளர்வது, தேவையான ஊட்டச்சத்துள்ள உணவு, கல்வி மற்றும் ஆதரவு என்னும் அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்
- முதியோர், பலவீனமானோர், ஊனமுற்றோர் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாத்தல்

கத்தோலிக்க திருஅவை மற்றும் அல்-அசார் இருவரும் இணைந்து பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் இந்த ஆவணத்தை உலகெங்கிலும் உள்ள அதிகாரத்தில் உள்ளோர், நாட்டுத்தலைவர்கள், சமயத்தலைவர்கள் ஆகியோருக்குத் தெரியப்படுத்துகிறார்கள். **இந்த ஆவணம் அனைத்துப் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உருவாக்க நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் பிரதிபலிக்கும் கருத்தாக மாறும்.** புதிய தலைமுறையினருக்கு கல்வி கற்பிக்கவும், பிறருக்கு நன்மை மற்றும் அமைதியைக் கொண்டுவரவும், ஒடுக்கப்பட்ட அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

எங்களின் விருப்பம் என்னவென்றால்: இந்த அறிவிப்பு கீழ்க்கண்டவற்றிற்கு ஒரு அழைப்பு:

- நம்பிக்கையுடையோர் மற்றும் நம்பிக்கையில்லாதவரிடையே நல்லிணக்கமும் சகோதரத்துவ மனப்பான்மையும் இருத்தல்
- கண்மூடித்தனமான தீவிரவாதத்தை நிராகரிக்கும் நேர்மையான மனச்சான்று
- சகோதரத்துவம் மற்றும் சகிப்புத்தன்மையின் மதிப்பீடுகளை போற்றுதல்
- பிளவுபட்ட இதயங்களை ஒன்றிணைக்கும் கடவுள் நம்பிக்கையின் மாண்புக்கு சாட்சிகளாய் இருத்தல்
- இந்த வாழ்க்கையில் அனைவரும் அனுபவிக்கக்கூடிய உலகளாவிய அமைதியை கண்டறியும் நோக்கத்துடன் கிழக்கு, மேற்கு, வடக்கு தெற்கு இடையே நெருக்கத்தின் அடையாளமாக விளங்குதல்.

**இந்த ஆவணம் அனைத்துப் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உருவாக்க நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் பிரதிபலிக்கும் கருத்தாக மாறும்.**

*Published by:*
Peninsular Malaysia
Pastoral Team

*Email:* api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

BUL 07/2023